1973 மார்ச் 27]

திரு. கா. வேழவேந்தன் : இப்படிக் கடன் வழங்குகின்ற ஏற்பாட்டில் இருக்கிற சிறு சிக்கலைப்பற்றி அந்த நிலவள வங்கிகள் அமைச்சரிடத்திலேயும், இந்த கூட்டுறவுத் துறைக்கும் அனுப்பி யிருக்கிற கோரிக்கை மனுக்களைக் கவனித்து விதிமுறைகளைத் தளர்த்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கடன் வழங்குவதிலே சிக்கல் ஏதும் இல்லை. உலக வங்கியின் நடைமுறை விதிகள் 1—11—1971-லிருந்து அமலுக்கு வந்தன. புதிய விதிகள் என்ன என்ன என்று தெரிந்துகொண்டு, கடன் மனுக்கள் அனுப்பப்பட வேண்டும். தெரிந்துகொள்வதிலே காலதாமதம் ஏற்பட்டதே தவிர, அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை.

புதிய கிணறுகள் தோண்டக் கடன்கள்

* 532 வினா.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், பம்பு செட்டுகள் அமைப்பதற்கும் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் கடனுகை வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, குழாய்க் கிணறுகளுக்காக 8.07 லட்சம் ரூபாய். பம்பு செட்டு களுக்காக 6.12 லட்சம் ரூபாய்.

Wild Life Sanctuary in Coimbatore district

* 533 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any Wild Life Sanctuary is to be set up in Coimbatore district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) 21—1—1973 அன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆனைமலை வனவிலங்கு உய்விடத்தைத் தவிர, கோவை மாவட்டத்தில், வேறு வனவிலங்கு உய்விடம் ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் தற்போது அரசுக்கு இல்லை.